புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 37. TML1176 - தி கிரேட் இந்தியன் கிச்சன் திரைப்படம் உணர்த்தும் பெண்ணியம்

செல்வி மு.பிரதீபா,
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, சுயநிதிப்பிரிவு, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு–12.

## முன்னுரை

*பெண்ணென்பவள் பொறுமைக் குணமும், அன்புள்ளம் கொண்டவளாகவும், தாய்மை உடையவளாகவும், குடும்பப் பொறுப்புள்ளவளாகவும், குடும்பத்திற்காக தன் ஆசைகளைத் தியாகம் செய்பவளாகவும் இருந்தால் மட்டுமே அவளின் பெண்மை மதிக்கப்படுகிறது. மாறாக பெண் கல்வி பெற்றாலோ, பெண்ணுரிமை பற்றிப் பேசினாலோ 'திமிர் பிடித்தவள்" என்றும் 'வில்லி" என்றும் முத்திரை குத்தப்படுகிறாள். 1980,1990களில் எடுக்கப்பட்ட திரைப்படங்கள் முழுக்க முழுக்க பெண்ணடிமைத்தனத்தை போதிக்கின்றன. நிறைய பழைய கருப்பு, வெள்ளை படங்களில் கதாநாயகி படித்த பெண்ணிற்கே உரிய மிடுக்கோடு நாகரிக உடையணிந்து வலம்வருவார். ஆனால் அவ்வாறு நாகரிக உடையணிந்து வரும் கதாநாயகி திமிர் பிடித்தவளாக சித்தரிக்கப்படுவார். அவர்கள் ஆணுக்குப் பெண் சளைத்தவர்கள் அல்லர் என்பதை சபதம் செய்பவராகவும் பின் ஆண்களால் ஒடுக்கப்பட்டு, ஆண்தான் உயர்ந்தவன் என்று ஒப்புக்கொண்டு ஆண்பெருமை பேசிக்கொண்டு, சேலை, பூ, பொட்டுடன் குடும்பப் பெண்ணாக வலம்வருவதாக சித்தரிக்கப்படுகின்றனர். இவ்வாறு பெண்ணடிமைத்தனங்களை வலியுறுத்தும் திரைப்படங்களைத் தாண்டி பெண்ணுரிமைக்காக குரல் கொடுக்கும்வண்ணம் சில திரைப்படபங்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் பெண்களின் விதிவிலக்கற்ற வேலைகளில் ஒன்றான சமைத்தலில் பெண்களுக்கு ஏற்படும் மனநிலை மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் உடல் ரீதியான சிக்கல்களைக் குறித்தும் மிகத்தெளிவாக எடுத்துக்கூறும் திரைப்படமாக 'தி கிரேட் இந்தியன் கிச்சன்" திகழ்கிறது. இக்கட்டுரை இத்திரைப்படம் குறித்து ஆராய்ந்து விளக்குவதாக அமைகிறது.*

## தி கிரேட் இந்தியன் கிச்சன்

*'தி கிரேட் இந்தியன் கிச்சன்" தமிழ், தெலுங்கு, மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் ரீமேக் செய்யப்பட்டு 2021–ல் வெளியான மலையள திரைப்படம். இத்திரைப்படத்திற்கு ஜியோ பேபி என்பவர் எழுத்து, இயக்கம் செய்துள்ளார். தமிழில் ஆர்.கண்ணன் என்பவரால் ரீமேக் செய்யப்பட்டு அதே பெயரில் ஐஸ்வர்யா ராஜேஷ் மற்றும் ராகுல் ரவீந்திரன் ஆகிய முன்னனி கதாபாத்திரங்களின் நடிப்பில் 2023–ல் வெளிவந்தது. இத்திரைப்படம் பார்வையாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், பல திரை விமர்சகர்களிடமிருந்து நல்ல விமர்சனங்களையும் பெற்றது. 'தி கிரேட் இந்தியன் கிச்சன்" சிறந்த படத்திற்கான கேரள மாநில திரைப்பட விருதைப் பெற்றது.*

## கதைக்களம்

*தன் நடனக்கலையின் மீதான மிகுந்த கனவுகளோடு வலம்வரும் பெண்ணான கதாநாயகிக்கும், பள்ளி ஆசிரியரான கதாநாயகனுக்கும் திருமணம் நடக்கிறது. பாரம்பரியமான பழைமை மண்டிக் கிடக்கும் புகுந்த வீட்டில் மாமனாருக்கும் கணவனுக்கும் மூன்று வேலைக்கும் காரம், காரமில்லாமல் என இரண்டு விதமாக பல பதார்த்தங்களுடன் சமைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. மாமியாருடன் சேர்ந்து சமைத்து ஓரளவு குடும்ப நிலையை அறிந்து கொள்கிறார். ஆணாதிக்கம் நிறைந்து காணப்படும் அந்தக்குடும்பத்தில் பெண்கள் சமையலறையே கதியெனக் கிடக்க, ஆண்கள் யோகா செய்தல், ஊடகங்களைப் பார்த்தல் போன்ற பொழுது போக்குகளில் ஈடுபடுகின்றனர். ஆவர்களுக்கான வேலைகளான நீரருந்துதல், பல் துலக்குதல், வெளியே செல்லும்போது செருப்பு அணிதல் போன்றவற்றிற்குக் கூட பெண்களையே*

எதிர்பார்ப்பவர்களாக உள்ளனர். மேலும் தான் உணவு முடித்த பின்னரே மனைவி உண்பாள் என்பதை கருதாமல் உணவினை உண்டுவிட்டு எச்சங்களை மேசை விரிப்பின்மீது பரப்பி வைக்கின்றனர்.

இப்படிப்பட்ட நிலையில் மாமியார் அவரது மகளின் பிள்ளைப்பேற்றுக் காலத்திற்காக மகளின் வீட்டிற்குச் செல்ல, கதாநாயகி ஒருவரே அக்குடும்பப் பொறுப்பு முழுமையையும் ஏற்கவேண்டிய சூழல் ஏற்படுகிறது. மேலும் அவளது கணவனும் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் உடல் மீதான ஆசை மட்டுமே உள்ளவனாகவும், ஆணாதிக்கம் மிகுந்தவனாகவும், மாதவிடாய் காலங்களில் பெண்களின் மீதான தீண்டாமையை ஆதரிப்பவனாகவும் இருக்கிறான். இவ்வாறான ஆதிக்கங்களையும் பொறுத்துக்கொண்டு செயலாற்றும் நிலையில், சமையலறைக் கழிவுநீர்த் தொட்டியில் கசிவு ஏற்பட்டு துர்நாற்றம் வீச அதனைக் கணவனிடம் முறையிட அவன் கண்டுகொள்ளாமல் செல்கிறான். இவ்வாறு சமையலறையே கதியென வாழும் கதாநாயகி ஒருகட்டடத்தில் தனக்கான வேலையில் ஈடுபடும் முயற்சியில் வேலைத்தேடி விண்ப்பிக்க நினைக்கிறாள். தனது எண்ணத்தை கணவனிடமும் மாமனாரிடமும் சொல்ல அவர்கள் பெண்கள் வீட்டிலிருந்தால்தான் குடும்பத்திற்கு செழிப்பு ஏற்படும் என்று கூறி அவளைத் தடுக்கிறார்கள். மேலும் அவளுடைய மாதவிடாய் காலத்தில் அவளைத் தனியறையில் அமர்த்தி யார் கண்களிலும் படக்கூடாது என்றும் அவள் தொடும் பொருட்களையெல்லாம் கழுவவேண்டும், தரையில்தான் உறங்கவேண்டும், அவளது ஆடைகளை மறைவாக உலர்த்தவேண்டும் என்றெல்லாம் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

இதுபோன்ற நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கும் வேலையில் மாதவிடாய் தூய்மையற்ற செயல்; அல்ல என்றும், பெண்கள் ஐயப்பன் கோவிலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் போராட்டங்கள் நடக்கி;ன்றன. அவளது குடும்பத்தினர் உட்பட பலரும் இதனை எதிர்க்க கதைநாயகி இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் முகநூலில் பதிவிட அதனை நீக்குமாறு கணவன் கூறுகிறான். இம்மாதிரியான பல அநீதியான நிகழ்வுகளால் கொதித்தெழும் கதாநாயகியை மேலும்; அவர்கள் வெறுப்பேற்ற சமையலறைக் கழிவுநீரை அவர்களின்மீது ஊற்றிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். இறுதியாக தான் விரும்பிய நடன ஆசிரியையாக சொந்த காரில் வலம்வருகிறள். அதேநேரம் கணவன் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான்.

### திரைப்படங்களில் பெண்களின் வாழ்க்கை நிலை சித்தரிப்பு

சங்ககாலம் தொடங்கி இன்றுவரை பெண்கள் ஏதேனுமொரு வகையில் அடிமைப்படுத்தப்பட்டுக் கொண்டே உள்ளனர். ஆணாதிக்கத்தால் மட்டுமே பெண்கள் அடிமைப்படுத்தப்படுவதில்லை. தீவிரமாக ஆணாதிக்க கொள்கைகளை ஆதரிக்கும் பெண்களாலும்; பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று ஆயிரமாயிரம் கற்பிதங்களை வழியுறுத்துகின்றனர். அவ்வாறான கற்பிதங்களுக்கு ஆன்மீக மற்றும் அறிவியல் தன்மையுடனான நியாயங்களை கற்பிக்கின்றனர். பகுத்தறிவுடன் அவற்றை நோக்கும்போது அவை பெண்களின் மீது தங்களின் அடிமைத்தனங்களை சுமத்தியிருப்பது விளங்கும்.

பெரும்பாண்மை பழைமைவாத ஆண்கள் தன்னிடமுள்ள குறைகளை பொருட்படுத்துவதில்லை. மாறாக பெண்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட கற்பிதங்களை மீறும் பட்சத்தில் அதனை பொறுத்துக்கொள்ள முடியாமல் பலவாறாக தங்களின் அடக்குமுறைகளை வெளிப்படுத்துகின்றனர். திரைப்படங்களும் பெண்களின் வாழ்க்கை முறையை பிரதிபலித்துக் காட்டுவதாகவே எடுத்துக்கொண்டாலும் இறுதியில் அவை பெண்ணடிமைத்தனத்தை ஏற்றுக்கொள்வதாகவே அமைகின்றன. இதற்கு முக்கிய காரணம் திரைத்துறை ஆண்களுக்கானது என்றிருந்ததே.

அன்றுமுதல் இன்றுவரை பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்தும் திரைப்படங்கள் ஏராளம். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு நடிகர்திலகத்தின் விவசாயி என்னும் திரைப்படமாகும். புடித்த நாகரிக பெண்களை நோக்கி ‘இப்படித்தான் இருக்கவேனும் பொம்பல” என்ற பாடல் பெண்களுக்கு கற்பிதத்தை வழியுறுத்துவதாக அமைகிறது. ஆனால் ஆண்கள் மனதில் எழும் சபலத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுவதற்குக்கூட பெண் ஆடையைக் குறைவாக அணிந்துள்ளதையே காரணம் காட்டியுள்ளனர்.

மேலும் திரைப்படங்களில் வலிமைமிக்க, தைரியமுள்ள ஆண்துணையின்றி செயல்படும் பெண்கதாபாத்திரங்களை வில்லிகளாகவோ, திமிர் பிடித்தவளாகவோ சித்தரிக்கின்றனர். எடுத்துக்காட்டாக படையப்பா திரைப்படத்தில் நீலாம்பரி கதாபாத்திரத்தை எடுத்துக்கொள்ளலாம். ஆண் துணையின்றி பெண்கள் செயல்படுவதை ஆண் சமுதாயம் ஏற்றுக்கொள்வதில்லை. பெண்கள்தான் வீட்டின் குலவிளக்கு, வீட்டின் இலட்சுமி எனவே அவர்கள் பாதுகாக்கப்படவேண்டிய பொக்கிஷங்கள் என்றெல்லாம் நியாயம் கற்பித்து பெண்களை அடக்குமுறை செய்கின்றனர். இவ்வாறாக பெண்களுக்கு கற்பிதங்களைக் கற்றுக்கொடுப்பதாகத் திரைப்படங்கள் அமைந்துள்ளன.

**பெண்களின் மீதான இரக்கமற்ற தன்மை**

*அன்றாட வாழ்வில் ஐந்தறிவுடைய விலங்குகள் கூட தனக்கான வேலைகளைத் தனே செய்துகொள்கின்றன. ஆனால் ஆறறிவு கொண்ட மனிதர்களில் பலர் இன்றும் தனக்கான வேலைகளைச் செய்ய மற்றவர்களை எதிர்பார்த்தே வாழ்கின்றனர். ஆவர்களின் தேவையை நிறைவேற்ற பெண் என்னும் துணை தேவைப்படுகிறது. இத்திரைப்படத்தில் கதாநாயகியும் அவளது மாமியாரும் ஓய்வின்றி சமையலறையில் வேலை பார்த்தாலும,; ஆண்கள் சமையலறையை எட்டிக்கூட பார்ப்பதில்லை. சமைத்த உணவை உண்பதை மட்டுமே செய்கின்றனர். மேலும் எழுந்ததுமுதல் பரபரப்பாக ஓடி ஓடி சமைத்த பெண்கள் உணவு உண்டார்களா இல்லையா என்பதைக் கூட பொருட்படுத்துவதில்லை. எந்த வேலையுமின்றி அமர்திருக்கும் அவளது மாமனாருக்கு பல்துலக்க பிரஸ், பேஸ்ட்டை கையில் கொண்டுசென்று கொடுக்க வேண்டும், வெளியில் செல்லும்போது கலணிகளை எடுத்துக் கொடுக்த்த வேண்டுமென்பதும் அநீதியின் உச்சமான பெண்களின் மீதான இரக்கமின்மையைக் காட்டுகிறது.*

**உணர்வு ரீதியான சிக்கல்களின் வெளிப்பாடு**

*பெண்கள் பலவீனமான பாலினம் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. ஆனால் பெண்கள் உடலளவில் மட்டுமன்றி மனதளவிலும் வலிமையானவர்கள் என்பதை ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. பெண்கள் சிறிய பிரச்சினைகளுக்குக் கூட மிகுந்த கவலை அடைவார்கள். ஆனால் விரைவிலேயே அதற்கான தீர்வினை கண்டறிந்து சிக்கலிலிருந்து வெளிவருவார்கள். பெண்கள் பிறந்த வீட்டில் எவ்வளவு சுதந்திரத்துடன் வாழ்ந்தாலும் புகுந்த வீட்டிற்குச் செல்லும்போது அந்த வீட்டின் நிலையை உணர்ந்துகொண்டு அதற்கேற்றவாறு தன்னை மாற்றிக்கொள்ளும் மனவலிமை படைத்தவளாக இருக்கிறாள். இத்திரைப்படத்தில் கதாநாயகி புகுந்த வீட்டில் முதல் நாளே குடும்பச் சூழலை புரிந்து கொள்கிறாள். அவளுக்கு அச்சூழல் பிடிக்கவில்லை என்றாலும் தன்னை அதற்கேற்ப மாற்றிக் கொள்கிறாள். உணவுவேளைகளில் மேசைமீது எச்சங்களை வீசிச் செல்வது அவளுக்கு அவர்களின்மீது வெறுப்பை உண்டாக்கினாலும் அவ்விடத்தில் அமைதியாக கடந்து செல்கிறாள். மாதவிடாய் காலத்தில் அவர்கள் கொடுக்கும் இன்னல்களுக்கும் பொருமை காப்பவளாகவே இருக்கிறாள். இவ்வாறு அனைத்து சிக்கள்களையும் பொருமையுடன் எதிர்கொண்டே வரும் கதைநாயகி ஒருகட்டத்தில் பொருமையிழந்து வீறுகொண்டு எழுகிறாள். ஒரே அடியாக குடும்பத்தையே உதரித்தள்விட்டு தனக்கான வேலையை நோக்கி பயணிக்கிறாள். இவ்வாறாக பெண்களின் பொருமைக்கும் எல்லையுண்டு எல்லை மீறும் பட்சத்தில் பெண் தன்னை சுதாரித்துக் கொள்வாள் என்பதை இத்திரைப்படம் விளக்குகிறது.*

**உடல் சார்ந்த வெளிப்பாடு**

*பெண்களுக்கான அன்றாட வேலையானது ஓய்வு, ஊதியமற்ற வேலைகளாக இருக்கின்றது. காலை யிலெழுந்து சமைப்பது தொடங்கி, இரவு உறங்கும்வரை ஓய்வு என்பது பெரும்பாலும் கிடைப்பதே இல்லை. மன வலியோடு சேர்த்து உடல் வலியையும் பெண்கள் எதிர்கொள்கிறார்கள். இத்திரைப்படத்தில் கதாநாயகி மூன்று வேலைக்கும் உணவு சமைப்பது, பாத்திரங்களையும் வீட்டையும் சுத்தம் செய்வது போன்ற வேலைகளிளேயே அந்த நாள் முழுவது ஓடிவிடுகிறது. இரவில் அப்பெண் ஓய்வினை எதிர்பார்க்கிறாள். ஆனால் தன் கணவனால் ஓய்வினை இழந்து துன்பப்படுகிறாள். பெண்களின் உடலுக்குகான ஓய்வென்பது முறையாகக் கிடைப்பதில்லை.*

*'பெண்களின் பாலியல் செயற்பாடுகள் தூய்மையற்றவை என்ற உணர்வு உலகம் முழுவதும் இருக்கின்றன"(1). மேலும் மாதவிடாய் காலங்களில் பெண்களின் உடல்சார்ந்த புரிதல்களின்றி தீட்டு என்ற பெயரில் அவர்களை தனியறையில் இருக்கச் சொல்வதும்;, அவர்கள் அணியும் ஆடைகளைப்பற்றிய தவரான புரிதல்களும் பெண்களுக்கு உடலளவில் ஏற்படும் சிக்கல்களுக்கு காரணமக அமைகின்றன.*

**யதார்த்தங்களின் வெளிப்பாடு**

*பெண்கள் தான் பிறந்தகத்தை விட்டு மற்றொரு பரிட்சயமில்லாத வுறிட்டிற்குச் சென்று தன்னை தகவமைத்துக் கொண்டு வாழும் நிலையில் தனக்கு அநீதிகள் விழைவிக்கப்பட்டாலும் அதனை எதிர்க்காமல் அப்படியே ஏற்றுக்கொண்டு தன்னை மாற்றிக் கொள்வதே யதார்த்தமாகும். கணவன் வீட்டின் சமையலறை கலாச்சாரத்தை கதாநாயகி மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுதல். அம்மியில் அரைத்துதான் சமைக்கவேண்டும் என்பதனையும், அவளது மாமனார் துணிகளை கைகளால் துவைக்க வேண்டுமென்று கூற அன்றுமுதல் துணிகளை கைகளாலே துவைத்தல். தன் கணவன் தன் சம்மதத்தைப் பற்றிக் கவலையின்றி தன் உடலைத் தீண்டுவது துன்பத்தைக் கொடுத்தாலும் அதனை ஏற்றல்;, கணவன் தன்னை உதாசீனப்படுத்தும் வேளைகளிலும் அதனைப் பொறுத்துக் கொள்வது, மாதவிடாய் கால சம்பிரதாயங்கள் தனக்கு புதிதாக இருப்பினும் அதனையும் ஏற்றல் என பல நிலைகளில் பெண்களின் யதார்த்தங்களை இத்திரைப்படம் எடுத்துக்காட்டுகிறது.*

**சுயநலமிக்க ஆணாதிக்க போக்கு**

'அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்
நிச்சமும் பெண்பாற் குரிய''(2)

இவ்வாறு தொல்காப்பியர் காலந்தொட்டே அச்சம,; மடமை, நாணம், கற்பு ஆகியவை பெண்களுக்கென வகுக்கப்பட்டன. இக்குணங்கள் இல்லாதவர்கள் பெண் தன்மை கொண்ட ஆண்களென சித்தரிக்கப்பட்டனர். ஆனால் ஆண்களுக்கோ வீரமும், பெருமையும் குணங்களாக வகுக்கப்பட்டன.

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன''(3)

இத்திரைப்படத்தில் ஆழமான ஆணாதிக்க போக்கு வெளிப்பபடுகிறது. பெண்களின் மனநிலைகளையும், உடல்சார்ந்த புரிதல்களும் அற்றவர்களாகவே இருக்கின்றனர். ஏந்திரங்கள் வளர்ச்சி பெற்ற இந்த காலக்கட்டத்திலும் அம்மியில் அரைத்து சமைத்தல், துணிகளை கைகளால் துவைக்க வலியுறுத்தல் போன்றவை அவர்களின் கருனையற்ற தன்மையை சுட்டுகின்றன. ஐயப்பன் கோவிலுக்குச் செல்ல மாலை போடடிருக்கும் கணவன் வண்டியிலிருந்து கீழே விழ அவனை ஓடிச்சென்று தூக்கிவிடும் கதாநாயகியை மாதவிடாய் காலத்தில் தொட்டுவிட்டதாகவும் இதனால் அவன் புனிதம் கெட்டுவிட்தாகவும் அவளை திட்டுகிறான். மேலும் தொட்டதனால் ஏற்பட்ட பாவத்தைப் போக்க புனிதநீராடுகிறான். இவ்வாறான ஆணின் இரக்கமற்ற தன்மையையும் சுயநலமிக்க குணத்தையும் இத்திரைப்படம் சுட்டுகிறது.

**முடிவுரை**

இவ்வாறாக கடந்த பல ஆண்டுகளாக இந்திய திரைப்படங்களில் ஆண்களை உயர்த்தியும் பெண்களைத் தாழ்த்தியும் திரைப்படங்கள் நடிக்கப்பட்டன. அன்றைய காலகட்டங்களில் பெண்கள் தங்களின் உரிமைகளைப் பற்றிய எண்ணங்களை வெளிப்படுத்தினரல்லர், அவர்களின் எண்ணங்களை வெளிப்படுத்துமளவுக்குக் கூட அவர்களுக்கு உரிமையளிக்கப்படவில்லை. இன்றைய சூழ்நிலை அதிலிருந்து சிறிது மாற்றம் பெற்றுள்ளது. பெண்களின் உரிமைக்காக சில திரைப்படங்கள் பேசுகின்றன. இனியேனும் திரைப்படங்கள் பெண்களை போகப் பொருளாக எண்ணாமல் ஆணும் பெண்ணும் சமமென்று சமத்துவம் பேனுவது நல்ல திரைப்படமாக அமையும்.

**அடிக்குறிப்பு**

1. பெண்ணியமும் பிரதிகளும், ப.எண்:140
2. தொல்(பொருள்), பா.எண்:96
3. தொல்(பொருள்), பா.எண்:95

**துணைநூற்பட்டியல்**


1. தொல்காப்பியம் (பொருளதிகாரம்), 2013, கதிர் பதிப்பகம,; திருவையாறு.
2. பெண்ணியமும் பிரதிகளும், காவ்யா சன்முக சுந்தரம், காவ்யா பதிப்பகம், சென்னை.